சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

மு.வ.எண்.71/2024

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் திரு.பாலகுமார்<br>த/பெ. ஹரிகிருஷ்ணன் | நாள் 21.04.2026 |
| வயது. | வட்டம் |
| கிராமம். | மாவட்டம். |

**<u>வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>**

1. நான் வாதி வங்கியின் கிளை மேலாளர். நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். பிரதிவாதி எங்கள் வங்கிக்கு எழுதிக் கொடுத்த கடன் விண்ணப்பம் மற்றும் ஒப்பந்தம் **வா.த.சா.ஆ.1 மற்றும் 2**. 1.11.2016, 29.10.2019, மற்றும் 19.10.2022 ஆகிய தேதியிட்ட கடன் ஒப்புகை ஆவணம் **வா.த.சா.ஆ. 3 முதல் 5**. பிரதிவாதிகளுக்கு நாங்கள் அனுப்பிய வழக்கறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் அஞ்சல் ரசீது வா.த.சா.ஆ.6. கடன் சம்பந்தமாய் எங்கள் வங்கியில் பராமரிக்கப்படும் கணக்கு வழக்கு **வா.த.சா.ஆ.7**

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை